தருமபுரம் ஆதீனம் வெளியீடு 35

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருளிச் செய்த

திருத்தொண்டத் தொகையும்,

தருமையாதீன 10-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

அசபா நடனப் பதிகமும்

1941.

பிரசுரம்.

திருஆரூர் என்னும் திருப்பதி சிவஸ்தலங்கள் பலவற்றிலும் சிறந்து, இலக்ஷ்மி பூசித்து வசித்து வருவதும், ப்ருதிவி ஸ்தலமெனக்கருதப்படுவதும், பிறக்க முத்தி தரும் தன்மையுடையதும், விராட்புருடன் மூலா தார ஸ்தலமெனக் கொண்டதும், சப்தவிடங்க க்ஷேத்திரங்களில் முதன்மையானதும் சமயாசா ரியர்களால் பாடப்பெற்றதுமான இந்த க்ஷேத் திரத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண் டத்தொகை பாடியருளியது உலகறிந்தவிஷயம்.

சிறந்த சைவ மடங்களில் ஒன்ருகிய திருக் கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம் ஆதி பர மாச்சாரியார் இத்திருவாரூர் ஸ்ரீ தியாகேசன் ஆலயத்திலுள்ள சித்தீச்வரத்தில் எழுந்தருளியி ருக்கும் தக்ஷிணமூர்த்தி சன்னதியில் உபதேசம் பெற்ற குருமூர்த்தியாவர். இவ்வாதீனத்தைச்

சேர்ந்த இராஜாங்கக் கட்டளை என்று வழங்கும் கட்டளை ஒன்று இத்தியாகேசர் ஆலயத்தில் நடை பெற்று வருகிறது. இவ்வாதீனத்தில் 10-வது பீடாதிபதியாக அமர்ந்தருளிய மகாசன்னிதானம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞான தேசிகசுவாமிகள்** பலவிதத்திலும் பிரபல்லியம் பெற்றவராவர். அவர்கள் இயற்றிய அற்புதங்கள் அநேகம் உள. ஓர்நாள் ஸ்ரீ தியாகேசர், சுவாமிகள் கனவில்தோன்றி ஆரூர் வரும்படி பணிக்க அங்கு தம் ஆன்மார்த்த பூஜையுடன் எழுந்தருளி ஸ்ரீ தியாகேசப்பெருமானை தெரிசித்து அசபாநடனப் பதிகம் பாடியருளினார்கள். இவ்வாதீன ஆதி குரு ஞானசம்பந்தர் அனுக்ரஹம் பெற்ற சித்தீச்வரத்தில் எழுந்தருளியிருக்கும் தக்ஷிணாமூர்த்தியை தரிசித்து திருவருட்பா திருவாய்மலர்ந்தருளினார்கள்.

இத்தருமபுரம் ஆதீனத்தில் 24-வது மகாசன்னிதானமாக எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ **சண்முகதேசிகபரமாசாரிய சுவாமிகள்** அநேக நூல்கள் அச்சிட்டுமக்கள் எளிதில் கற்றறிந்துய்ய

இலவசமாக வழங்கிவரும் முறைப்படி, இதுவரை யில் அச்சுக்கு வராதிருந்த மேற்சொன்ன அசபா நடனப் பதிகத்தை அச்சு இயற்றி அத்துடன் ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை பதிகத்தையும் சேர்த்து அச்சிட்டு இல வசமாக வெளிவரும்படி செய்திருக்கின்றார்கள்.

திருத்தொண்டத்தொகை - பண். கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்
திருநீலகண்டத்துக் குயவனுர்க் கடியேன்
இல்லையே யென்னுதவியற்பகைக்கு மடியே
னிளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கடி
அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியேன்[யேன்
ஆரூர னாரூரி லம்மானுக்காளே. 1

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தர்க் கடியே
னேனாதி நாதன்ற னடியார்க்குமடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கடியேன்
கடவூரிற் கலையன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறனெஞ்சாத
வாட்டாய னடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனல் மங்கை யானயர்க் கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக்காளே. 2

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
திருக்குறிப்புத்தொண்டர்தம் மடியார்க்குமடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடாநிற்க
வெகுண்டெழுந்த தாதையை மழுவினாலெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைத னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கு மடியேன்
ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியே
னொலிபுனல்சூழ்சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. 4

வம்பறு வரிவண்டு மணநாறமலரு
மதுமலர் நற்கொன்றையா னடியலாற் பேணு
தெம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன்
ஏயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்
நம்பிரான் திருமூல னடியார்க்கு மடியேன்
நாட்டமிகுதண்டிக்கு மூர்க்கர்க்கு மடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. 5

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்டர்க்கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற்றறிவார்க்குமடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோனடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. 6

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சியபுகழ்ச்சோழற் டிகயேன்
மெய்யடியா னரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தர்க் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர் கோனடியார்க்குமடியேன்
ஐயடிகள் காடவர்கோ னடியார்க்குமடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. 7

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்குமடியேன்
நிறைக்கொண்ட சிந்தையா னெல்வேலிவென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ்சோதித்
தொன்மயிலைவாயிலா னடியார்க்குமடியேன்
அறைக்கொண்ட வேனம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக்காளே. 8

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனுஞ் செருத்துணைதன் னடியார்க்குமடி
புடைசூழ்ந்த புலியதண்மே லரவாடவாடிப் [யேன்
பொன்னடிக்கே மனம்வைத்தபுகழ்த்துணைக்குமடி
அடல்சூழ்ந்தவேனம்பிகோட்புலிக்குமடியேன் [யேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. 9

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்கு மடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. 10

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாண் மானிக்கு நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனா மரனடியே யடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பார்
ஆரூரி லம்மானுக் கன்பராவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

அசபா நடனப் பதிகம்.

நீடுசெந் ரோதயம் போல்வதன மசையவரு
ணிறைகமல நயன மசைய

நின் றுநதி மதியசைய வொன் றுசடை முடியசைய
நிகழ்மந்த காசமசை யத்

தோடலர் செவந்தியந் தொடையசையு மார்பிற்
றொடுத்தசெங் குவளையசை யத்

துங்கமழு மானசைய வங்கதஞ் சதகோடி
சூரியர்கள் போலசைய மால

தேமேர வக்கிண் கிணிப்பாதமசையவொரு
செம்பொன்மலை வல்லியசை யச்

செய்யகும ரேசர்நடு நின்றசைய நவரத்ன
சிம்மா சனத்திருந் தே

யாடுமுன் னசபநட மடியனென் றுங்காண
வருளுவாய் தியாகேச னே

யசைவில்கம லேசனே யசபா நடேசனே
யானந்த வுல்லாச னே 1

தத்துவ சொரூபமுந் தத்துவா தீதமுந்
தத்வகர்த் தாவுமென் றுஞ்
சகளா களாதீத சந்தோஷ சல்லாப
சறுவகு ணியவஸ்து வும்
நித்திய நிராமய நிராதங்க நிர்த்தொந்த
நிர்க்குண நிராதார மும்
நிர்மல நிராவாச நிற்சங்க நிர்விகற்ப
நிஷ்ப்ரபஞ் சச்சோதி யாய்ச்
சுத்தபூ ரணசச்சி தானந்த முஞ்சோம
சூரிய ரனந்தகோ டி
துங்கவொளி கங்குலென மங்கவரு மோர்தற்
சொரூபப்ர காசமும்வி டா
வத்துவித சித்தாந்த முத்திநீ யானதால்
ஆரறிவர் தியாகேச னே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
யானந்த வுல்லாச னே 2

வதனமுங் கருணைசடை மகுடமுங் கருணைசெவ்
வடிவமுங் கருணைகழு நீர்
மாலையுங் கருணைசெவ் வந்தியுங் கருணையிள
மானுமழு வுங்கருணை மே
லுதரமுங் கருணைகங் கணவரவ முங்கருணை
யுழுவையத ளுங்கருணை பை
யுரககிண் கிணிதழுவு சரணமுங் கருணையரு
குமையம்மை யுங்கருணை வேல்
மதலையுங் கருணைபல சிங்கஞ் சுமந்திடும்
மணிப்பீட முங்கருணை மேல்
வளரண்ட கோடிகளெ லாம்வாழ வாரூரில்
வாழ்வதுங் கருணைபா ச
மதிரநட மிடுமெசபை யுங்கருணை நின்கருணை
யாரறிவர் தியாகேச னே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
யானந்த வுல்லாச னே 3

கருணைவா ரிதியே குணநிசய மேபூர்ண
கற்பதரு வேயனந் தங்
கலைமதிய மேஞான பாநுவே தேட்டாத
கண்ணின்வளர் கருவூல மே
திருவருட் செல்வமே யானந்த வாழ்வே
தெவிட்டாத தெள்ளமிர்த மே
செங்கரத வாமலக பலமே செகத்தையாள்
தேவர்கள் சிரோரத்ன மே
ஒருபரப் பிரமமே யென்றுனைப் பாடிஞ
னுல்லாச மாயாடி யே
யொண்பூர ணனந்த வின்பவமு தினைமேவ
வுனதுள மகிழ்ந்தருளு வாய்
அருணகண பணவுரக கிண்கிணிக் காலனே
யழகார் தியாகேச னே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
யானந்த வுல்லாச னே 4

மண்டலந் தன்னிலா ரூரென்னு முண்டக
மலர்ந்தமூ லாதார மும்

மண்டனந் தஞ்சந்த்ர சூரியர்கள் போல்வதனம்
வயங்கிடுங் கரியமே க

கண்டனு முன்றனையு மண்டகோ டிகளீன்ற
கௌரியையு மென்னையா ளுங்

கந்தசா மியையுமரு டருகழற் காலிலே
கட்டமொ டரவமென் னுங்

குண்டலியு மொன்றுகிண் கிணியென்று நாதமுங்
கொள்விசுவ மாதார மாய்க்

கொண்டோடி மீளவும் ப்ராணனீ தென்னுமுன்
குலவுமச பாநடத் தை

அண்டத்தி லுள்ளபடி பிண்டத்தி னுன்காண
அருளுவாய் தியாகேச னே

அசைவில்கம லேசனே யசபா நடேசனே
யானந்த வுல்லாச னே 5

படியாட மேலண்ட பாதாள மாடவிப்
பார்தாங்கு பாந்தளா டப்
பானுமதி யாடமறை யாடவய னுடவிரு
பத்மலோ சனனுட வான்
முடிவிலா வமரர்களு முனிவர்களு மாடவலை
மோதுமெழு கடலோசை போல்
முழவுமத் தளதாள சங்கநா தம்பெரிய
மூதண்ட முகடளப் பச்
செடிகுடிலை மாயையிரு திரைவளைத் தேமலஞ்
சிதையதிந் திமிதியென் றே
செங்கனக தண்டதனில் வீற்றிருந் தாடுமுன்
றிருந்துமச பாநடத் தை
அடியனேன் காணமுன் பென்னதவ மாற்றினே
னருளுவாய் தியாகேச னே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
யானந்த வுல்லாச னே 6

வம்பான தனுகரண புவனபோ கங்கடிய
வல்விரு ளெனப்போக வும்
வளர்கர்ம மாயையும் பஞ்சமல முங்கொடிய
வலியவினை விட்டோட வும்
கெம்பீர நாதநா தாந்தமுஞ் சத்தியுங்
கிளர்வியா பினிசமனை யுங்
கிட்டவரு முன்மனை வியோமரூ பியுமன்பர்
கிட்டிடு மனந்தையமு தக்
கம்போ லனுதைய மனுசிறுதை யுஞ்சந்த்ரர்
கதிரவ ரனந்தகோ டி
கங்குலென வெங்கும்ப்ர காசித்தொலித்திடக்
கட்டுமர வக்கிங்கி ணி
யம்போ ருகச்சரணை யடியனேன் முடியில்வைத்
தருளுவாய் தியாகேச னே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
யானந்த வுல்லாச னே 7

ஊனந் தவாமல மெனுங்கோடை தணியவும்
உற்றமா யேயமென் னு
மொழுகுபெய ரழியவும் மாயையெனு மொழியாத
வுடலழுக் கொழியவுமு னே
யீனந் தருந்திரோ தானமென் றிடவரு
மிளேப்பார வுங்கன்ம மா
மீடில்வட வாமுகச் சூடுபோ கவுமெனே
யிருந்தபடி யிப்படியி லே
தானந்த மடிநடுவு மில்லாமை பெருகியே
தன்கருணை யூற்றெடுத் துத்
தங்கிடும் பரையாதி யென்றிடுந் திரைவீசிச்
சார்ந்திடுஞ் சொரூபசச் சி
தானந்த வெள்ளத் தழுத்திவிடு நின்னுடைய
காலினல் தியகேச னே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
யானந்த வுல்லாச னே 8

பொல்லாத விருண்மனையை யில்லாத வாழ்வை
புழுமலங் கட்டுபொதி யைப் [வெகு
புன்புலால் நாறிடும் புலைக்கலத் தைத்தினம்
புதுமைதரு பொய்ப்புரட் டை
நல்லோ ரெறிந்திடும் பாண்டத்தை நாய் நரிகள்
நாடிடும் பிழையுட லை
நானென்று மெனதென்று நானடு விராமனீ
நாணு யிருக்கவைப் பாய்
கல்லாலி நீழலி லிருந்தகற் பகமே
கருணையங் கடலமுத மே
கரும்பினின் கட்டியே யொருவர்பூ ணுதக்
கவுத்துவ மகாரெத்ன மே
அல்லாரு மணிகண்ட வகளங்க துங்கத்ரி
யம்பகத் தியாகேச னே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
யானந்த வுல்லாச னே 9

பொன்னையும் மண்ணையும் பெண்ணையும்
[பொருளென்று
பொய்க்கடலி லேவிழுந் து
போம்வழிகள் காணுமல் முன்றவத் தாலுனது
பொன்னடிப் பிணைபிடித் த
என்னையுங் கைதந் தெடுத்து ரெட்சித்தனை
யின்னமு மிரங்கியிங் கே
யேகாந்த மாகவே யின்பபூ ரணவீட்டி
லிறுமாந் திருக்கவைப் பாய்
தன்னிகரி லாதசிவ ஞானதே சிகனே
சிதம்பர சபாநாத னே
தன்கயிலை நாதனே சகலபுவ னேசனே
சரவணேற் பவசகத் துக்
கன்னையுட னவரத்ன சிங்கா தனத்திருந்
தருளுந் தியாகேச னே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
யானந்த வுல்லாச னே (10)

குருபாதம்.

ஸ்ரீ சந்திரா பிரஸ், மாயவரம்.